2012 ஏப்ரல் 10]

மட்டுமல்ல; யானைகளுக்கும் புத்துணர்ச்சி முகாம் நடத்தி, அவற்றின் வாழ்வில் வசந்தத்தை உருவாக்கிய எங்கள் இதய தெய்வமே! திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு நன்கொடையாளர்கள் மூலமாக யானை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியினை இந்த நேரத்திலே தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்றைக்கு ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துவிட்டு, நாளைக்கு அதை* consider *செய்வோம்.* Please sit down.

3. விதி 110—ன்கீழ் அறிக்கை

தமிழ்ப் புத்தாண்டு தினம் முதல் உழவர் பெருவிழா முகாம்கள் நடத்துவது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கேட்டுள்ளார்கள்; அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11—10

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வயிற்றுக்குச் சோறிட வேண்டும், இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்' (மேசையைத் தட்டும் ஒலி) என்ற மகாகவி பாரதியின் குறிக்கோள் நிறைவேற, பெருகிவரும் மக்கள்தொகைக்கேற்ப உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதும், உணவுப் பாதுகாப்பில் நிலையான தன்மை அடைவதும் மிக மிக*

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 ஏப்ரல் 10

அவசியமாகும். இந்தக் குறிக்கோளை எய்தும் வகையில் தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்துவதற்கான பல்நோக்குத் திட்டங்களை எனது தலைமையிலான அரசு எடுத்துவருகின்றது.

தமிழகத்தின் தொழில் வளர்ச்சி பெரிய நகரங்கள் மட்டுமின்றி, சிறிய நகரங்களிலும் வளர்ந்துவருவதால், பெரும்பாலான விவசாயத் தொழிலாளர்கள் வேறு வேலை தேடி நகரங்களுக்குக் குடிபெயர்ந்து செல்கின்றனர். இதன் விளைவாக ஏற்படும் தொழிலாளர்கள் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில், வேளாண் இயந்திரமயமாக்கலை எனது தலைமையிலான அரசு நிறைவேற்றி வருகிறது. இதன்படி, வேளாண் இயந்திரங்களைக் கொள்முதல் செய்வதற்காக ஒவ்வொரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் மானியமாக 20 இலட்சம் ரூபாய் வீதம் 400 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 80 கோடி ரூபாய் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் கொள்முதல் செய்யப்படும் வேளாண் இயந்திரங்கள் குறைந்த வாடகையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதன்மூலம், விவசாயிகள் குறைந்த வேலையாட்களைக் கொண்டு, இயந்திரங்கள்மூலம் அதிக சிரமமின்றி விவசாயப் பணிகளை விரைவாகச் செய்ய இயலும். மேலும், நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதனால், குறைந்த நிலப்பரப்பில் அதிக அளவு உணவு உற்பத்தி கிடைக்க வழிவகுக்கும்.

தமிழ்நாட்டில் நுண்ணீர்ப் பாசனம் அமைத்துப் பயிரிடும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 விழுக்காடு மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியமும் எனது தலைமையிலான அரசால் வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் உணவுப் பொருட்களை விலை வீழ்ச்சியடையும் காலங்களில் சேமித்து வைத்து, நல்ல விலை கிடைக்கும் காலங்களில் விற்பனை செய்ய ஏதுவாக விவசாயக் கிடங்குகள் கட்ட உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், அதிக அளவு உணவு உற்பத்தி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்களுக்கு விருது வழங்குவதற்கும் நான் ஆணையிட்டுள்ளேன்.

இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு மேலும் வலு சேர்க்கும் விதமாக, வேளாண் விஞ்ஞானிகள் உருவாக்கும் புதுப் புது ரகங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் விவசாயிகளைச் சென்றடைவதில்

ஏற்படும் காலதாமதத்தைக் களையும்வண்ணம் பல்வேறு விவசாய உத்திகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்காக தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பண்ணைசார் பயிர் மேலாண்மை மென்பொருளை வேளாண்மைத் துறை வடிவமைத்துள்ளது.

விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்நுட்பங்களை விவசாயப் பெருமக்களிடம் எடுத்துச் செல்லும் வகையில், உழவர் பெருவிழா எனும் விழிப்புணர்வு முகாம்களை கிராம அளவில் நடத்த எனது அரசு முடிவு செய்துள்ளது. இந்த விழிப்புணர்வு முகாம்கள், வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் விற்பனை, வேளாண் பொறியியல், விதைச் சான்று, கால்நடை பராமரிப்புத் துறை, மீன் வளம் மற்றும் பால் வளம் போன்ற துறை அலுவலர்கள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண் அறிவியல் நிலையங்களைச் சார்ந்த விஞ்ஞானிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் அந்தந்தப் பகுதிகளைச் சார்ந்த சேவை வங்கியின் பிரதிநிதிகள்மூலம் “நடமாடும் விரிவாக்க மையம்” என்ற அணுகுமுறைமூலம் நடத்தப்படும்.

குறிப்பிட்ட கிராமச் சூழ்நிலைக்கு மிகவும் பொருந்தும் வகையில், தெரிவு செய்யப்பட்ட இலாபகரமான பயிர் ரகம், தொழில்நுட்பங்கள், கால்நடை வளர்ப்பு, பட்டுப் புழு வளர்ப்பு, வேளாண் காடுகள் வளர்ப்பு, மீன் வளம் முதலான இனங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பண்ணைய முறையினைப் பின்பற்றி, பண்ணை உற்பத்தித் திறனை உயர்த்தும் வகையில் தகவல்கள் மற்றும் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடம் எடுத்துரைப்பதற்காக இவ்வலுவலர்கள் இதர இடுபொருட்கள், விநியோகிப்பாளர்களுடன் இணைந்து ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கும் சென்று, ஒருநாள் முழுவதும் விவசாயிகளுடன் கலந்துரையாடுவார்கள். அந்தந்த கிராமங்களில் ஏற்படும் பண்ணை அளவிலான களப் பிரச்சினைகளுக்கு இந்த முகாம்களில் தீர்வு காணப்படும்.

தெருக் கூத்துகள், நாடகங்கள், கிராமியப் பாடல்கள் மற்றும் நடனம் மூலமாக விவசாயிகள் எளிதில் அறிந்துகொள்ளும் வகையில், தகவல்கள் இந்த முகாம்களில் அளிக்கப்படும். மேலும், பல்வேறு செயல் விளக்கங்கள், சிறு கண்காட்சிகள், வல்லுநர்கள் மற்றும் இடுபொருட்கள் விநியோகிப்பாளர்கள் உடனான

கலந்துரையாடல்கள் ஆகியவையும் இந்த முகாம்களில் இடம்பெறும். இம்முகாம்களில், விவசாயிகள் ஒருங்கிணைந்த கையேடு, விவசாயிகள் தொழில்நுட்ப வழிகாட்டி, வேளாண் இடுபொருட்கள் ஆகியவை விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

முற்பகல் 11–15

அனைத்துத் துறைகளின் பணிகள், திட்டப் பலன்கள் மற்றும் அலுவலர்களின் முயற்சிகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்பச் செய்திகள் மற்றும் திட்டப் பலன்கள் விவசாயிகளின் சொந்த கிராமத்திலேயே கிடைக்கச் செய்யும் வகையில் நடத்தப்படும் இந்த உழவர் பெருவிழா, எதிர்வரும் தமிழ்ப் புத்தாண்டு தினமான (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஏப்ரல் 13, 2012 அன்று தொடங்கி, தமிழகத்தில் உள்ள 16,564 வருவாய் கிராமங்களிலும் நடத்தப்படும். இந்த முகாம்களில் கலந்துகொள்ளும் விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவருக்கும் அறுசுவை விருந்து அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) நவீன வேளாண்மையில் உள்ள சவால்களை விவசாயிகள் எதிர்கொண்டு, அவர்களை வேளாண் வல்லுநர்களாக்கி, தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை விரைவில் ஏற்படுத்த இந்த உழவர் பெருவிழா வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தமிழ்ப் புத்தாண்டு தினம் முதல் உழவர் பெருவிழா முகாம்கள் நடத்துதல்—முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தரைமீது வந்து உதித்த சித்திரை முழு நிலவாக, சித்திரை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டு தினமாக அறிவித்திருக்கிற நம்முடைய மாண்புமிகு போற்றுதலுக்குரிய (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்தச் சித்திரையில் தமிழகத்திலே இருக்கிற கோடிக்கணக்கான உழவர் பெருமக்கள் மகிழ்ந்து, அறுசுவை விருந்தோடு அதைக் கொண்டாடுகிற ஒரு வாய்ப்பையும்